புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது
௨
விரோதிஞு (1889) ஆவணிமீ உ௰௨ ஆரம்பமானது.

பத்திரிக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம் | ரூ 5·00 |
| இங்கிலீசும் தமிழும் | 9·00 |
| இலங்கை இந்தியா | ரூ 8·00 |
| இங்கிலீசும் தமிழும் | 12·00 |
| சொலிவாப்பகுதி | ரூ 9·00 |
| இங்கிலீசும் தமிழும் | 13·00 |

முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

விளம்பரவிகிதம்.

முதன்முறைக்கு:

| | |
|---|---|
| ஒருகலம் ரூபா | 10·00 |
| அரைக்கலம் ,, | 5·50 |
| கார்க்கலம் ,, | 4·00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

"சீர்பூத்த கருவிதூ ணுணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்கணோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்கணிங்கப் பரம்பூத்த சைவநெறிபோரோர் தாங்கப்,
பேர்பூத்த சிவானந்த தினிதூ றூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த, வார்பூத்த வறிவின்சை தொழிலென் ஞேரு மதம்பூத்த விநாயகன்றூள் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னுமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—௫௬ } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஞு மாசிமீ உ௰உ; (1934 மார்ஜ் 5) திங்கட்கிழமை. { இலக்கம்—அ௬

## பயனுள்ள கல்வி.

(ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தா.)

கல்வியோ கரையற்றது; கற்பவரோ சில வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவின் மாக்தர்; ஆதலின் கற்கப்படு நூல்க ளிவையெனவும், அவற்றைக் கற்குமாறு இதுவெனவும், கற்றதனாலெய்தும் பய னிதுவெனவும் வல்லார் வாய்க் கேட் டுணர்ந்து கற்றற்குரிய காலத்திற் கற்கப் படுபவற்றைக் கற்று நெறிநின்று கலனெய் தும் மாக்தரே வாழ்க்கைப்பயனை யடைத லோராவர். "யாதானுநாடாமா லூராமாலென்னொருவன், சாந்துணையுங் கல் லாதவாறு" என ஆசிரியர் கூறினரேனும் பள்ளிக்கல்விக்கு ஒரு காலவரை யறை யுண்டு; அது நிரம்பியபின்னர் வாழ்க் கையி லெய்தற்பால கலன்கள் வேறுபல வுள வாகலின்.

ஆடவர் மகளிராகிய இருபாலாரையும் ஐயாண்டு நிரம்பிய பின்றைப் பள்ளிக்கு வைத்தல் பண்டையோர் கண்டமரபு. மக ளிர் ஏழாண்டு கல்விபயின்று பன்னிரண்டு பிராயம் புக்கபின்னர்த் தாம் பயிலுதற் குரிய பள்ளிக்கல்வி நிரம்பியவராய் இற் செறிந்திருத்தலும் ஆடவர் பதினைந் ராண்டு பயின்று எண்ணீராண்டு நிரம்பிய பின்னர்ப் போர்த்தொழில் முதலிய பிற தொழின் மேற் செல்லுதலும் அக்கா லத்து வழக்கமென எண்ணுதற் கிட முண்டு.

நாடக மகளிர்க்குப் பயிற்றப் படுவன ஆடலும், பாடலும் அழகுமென்னு மூன்றுமாம். இதனை,

"ஆடலும் பாடலு மழகு மென்னக்
கூறிய மூன்றி னொன்றுகுறை படாமல்
லேழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி"

என இளங்கோவடிகள் கூறியதனு லுணர்க.

"வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்
பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலும்
தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலும்
கந்துகக் கருத்து மடைநூற் செய்தியும்
சுந்தரச் சுண்ணமுந் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமும்
காயக் கரணமுங் கண்ணிய துணர்தலும்
கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும் [லும்
வட்டிகைச் செய்தியு மலரய்ந் தொடுத்த
கோலங் கோட லுங் கோவையின் கோப்பும்
காலக் கணிதமுங் கலைகளின் றுணிவும்
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறை போகிய பொற்றொடி நங்கை"

எனச் சீத்தலைச் சாத்தனுர் கூறியவாற்றால் ஆடல், பாடல் அழகு எனத் தொகுத் துக் கூறிய மூன்று துறைகளின் விரிவு இவையென உணர்க.

பதினாறுட்டைப் பிராயம் புக்குக் கல்வி நிறைவுற்ற ஆடவரிடத்துக் காணப்படுஞ் சிறப்பியல்புகள் நான்கு எனத் தொகுத் துக் கூறப் பட்டன. இவற்றை,

"கலையினை தகலமுங் காட்சிக் கின்பமுஞ்
சிலையினை தகலமும் வீணைச் செல்வமும்
மலையினி னகலிய மார்ப னல்லதில்
வலகினி லிலையென வொருவ னுமினன்"

எனத் திருத்தக்கதேவர் உரைத்தவற் றைக் கொண்டுணர்க. சீவக சாமி கலை நிரம்பிக் கண்டோர் விரும்பும் அழகெய்தி உடற் பயிற்சியா லகன்று விளங்கிய மார் பனும் வில் வித்தை கைவரப் பெற்று இசைப்பயிற்சி யுடையோனுமாய்த் திகழ்க் தானென மேலைச் செய்யுளா லறிகின்றாம்.

இரு பாலார்க்கும் வகுத்துக் கூறிய கல்வி முறை யனைத்தினையும் உடற்பயிற்சி உளப்பயிற்சி, இசைப்பயிற்சி என மூன் றிறப் படுத்திக் கூறுதல் கூடும்.

யவன புரத்துப் பேராசிரிய ராகிய "பிளேத்தோ" (Plato) என்பவரும் கல்வி யினை இங்ஙனம் மூத்திறப் படுத்தியே முறைகூறினர். இப்பெரியாரது பெய ராகிய "பிளேத்தோ" என்னும் யவன மொழி "அகன்ற மார்பன்" எனப் பொரு டருகிற்றலையும் நோக்குக. வீரமாபுரம் எனப் பழைய யவன ஆசிரியர்களாலே போற்றப்பட்ட "ஸ்பார்ட்டா" (Sparta) என் னும் நாட்டிலேவாழ்ந்த அறநூற் போ சிரியராகிய "லிக்கர்ஸ்" (Lycurgus) என் னும் பெரியார் இசைப்பயிற்சியை யொ ழித்து ஏனைய இரண்டினையும் கைக் கொண்டார்.

உதயணகுமாரனும் சீவக சாமியும் ஆகுடைய பிறையாரும், வாகீசப் பெருந்தகையாரும் இசையில் வல்லுனரா யிருந்தனரெனத் தமிழாசிரியர் கூறின ரேனும் ஏனைய இரண்டினையும்போல இசைப்பயிற்சியை அத்துணைச் சிறப்பின தாகக் கொண்டாரென்று எண்ணுதற் கிடமிலை.

இங்ஙனம் ஆராய்வுழி, "பயனுள்ள கல்வி" இருதுறைப்படுமெனவும் அவை தாம் உடற்பயிற்சியும் உளப்பயிற்சியு மாமெனவும் அறிகின்றோம். இவை ஒன் றினுேடொன்று தொடர்புடையன. "உள் ளத்துறுதி உடலுறுதிக் கண்ணது" (Mens sana in corpore sans) எனும் மேனாட்டு ஆசிரியர் கூற்று ஈண்டு நோக்கற்பாலது. ஊக்கமை, கல்வி, துணிவுடைமையென நிலனுன்பவர்க்கு வகுத்துக் கூறிய மூன்றனுளிரண்டு உள் ளத்துறுதியினுேடு உடலுறுதியினையுஞ் சார்ந்து நிற்பன.

ஆண்மை யென்பது ஆளுந்தன்மை யாதலானும், பெண்மை யென்பது விரும் புந்தன்மை யாதலானும் நிலனுன்பவர்க் கும் நாடகமகளிர்க்கும் வகுத்துக் கூறிய கல்விமுறை எல்லா ஆடவர்க்கும் மகளிர்க் கும் ஏற்புடையதென்ப தெளிதலே. திரு வள்ளுவநாயனாரும், "கல்வி" யென்னும் அதிகாரத்தினை அரசியலுள், "இறை மாட்சியை" யடுத்து நிற்க வைத்து நூலி யற்றினர் ஆளுந்தன்மையாகிய ஆண் மையை வளர்த்தற் குரிய உடற்பயிற்சியு ம உளப்பயிற்சியும இவையெனத் தெளிந்து ஆண்மக்களைப் பயிற்றுதலும், விரும்புந் தன்மையதாகிய பெண்மையை வளர்த் தற்குரிய உடற்பயிற்சியும் உளப்பயிற்சி யும் இவையெனத் தெளிந்து பெண்மக்க ளைப் பயிற்றுதலும் உண்மைக் கல்வி பயிற்றுதலாகும்.

முதலில் உளப்பயிற்சியை யாராய் வோம்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்பவிவ் விரண்டென்ப வாழு முயிர்க்கு" [ரண்டின்

என்றாராகலின், எண்ணும் எழுத்தும் அனைவர்க்கும் பொதுவாகிய உளப்பயிற் சிப்பாலனவாமெனவறிக. இனிக் கற்றோ ரெனப்படுவார் தேயமிடையிட்டவுங் கால மிடையிட்டவும் காணும் ஞானக்கண் ணுடையார் என்றமையின் வேற்றுத் தேயச்செய்திகளையறிதற்குரிய நாட்டியல்பி னுெடு ஒட்டியுணர்தற்குக் கருவியாகிய புவியியல் நூலும் (பூகோளசாஸ்திரம்) இறந்தகாலத்து நிகழ்ச்சிகளை நிகழ்காலத் தோடு ஒப்பிட்டு நோக்கி எதிர்காலத்தின் சீர்மையைக் கண்டறிதற்குக் கருவியா கிய வரன்முறை நூலும் (தேச சரித்தி ரம்; இதிகாசம்) உளப்பயிற்சிக்கு இன்றி யமையாது வேண்டப்படுவன. இவற்றின் விரிவெல்லாம் பின்னர்க் கூறுதும்.

தொடர்ச்சி 3-ம் பக்கத்தில்.

## இலங்கை அரசியல் நிலைமை.

—— (o) ——

### தேசாதிபதி அறிக்கையிடுவாராம்.

### பாராளுமன்றத்திற் பரபரப்பு.

சென்ற புதன்கிழமை இலங்கை அரசி யலை பற்றிப் பாராளுமன்றத்தில் மீண்டும் விவாதிக்கப்பட்டது. டொனுேமூர் அரசி யற் றிட்டம் எவ்வாறு நடைபெறுகிற தென்பதைப்பற்றி இலங்கைத் தேசாதி பதி ஓர் அறிக்கை விடவேண்டுமென அவரைக் கேட்கவேண்டுமென்று சேர். ஹென்றி பேஜ் குரூப்ற் கூறினர்.

அரசியல்நிலைமை சம்பந்தமான விஷயங் களைப்பற்றித் தேசாதிபதி அறிக்கையிடு வார் என்று நம்புவதாக அரசினர் சார்பாக மிஸ்ரர் மல்க்கோம் மக்டோ னல்ட் என்பவர் பதிலளித்தார்.

## அகில இலங்கை தமிழ் வைத்தியர் மகாநாடு.

இலங்கைத் தமிழ் வைத்திய சங்கத் தின் அதிகிர்வாகசபை (Executive Committee) க் கூட்டமானது ஸ்ரீமுகஞு மாசிமீ 13 ந்திகதி (24 - 2 - 34) சனிக் கிழமை, சாயந்தரம், 3 மணியளவில் வண்ணார்பண்ணை, குறுமுனி வைத்திய சாலைமண்டபத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் கீழ்க்கண்ட நிர்மானங்கள் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டன.

1. அகில இலங்கைத் தமிழ் வைத்தியர்கள் மகாநாடு ஒன்றைப் பவஞு சித்திரை மீ 1 ம் கிழமையில் வண்ணார்பண்ணை இந்துக்கல்லூரி மண்டபத்தில் கூட்டவேண்டும்.

2. அவ்வாறு கூடும் மகாசபையை ஒழுங்காக நடத்துவதற்காக, ஒருவரவேற்புச்சபை (Reception Committee) ஒன்றைத் தெரிவு செய்வ தற்காக, இலங்கைத் தமிழ் வைத்திய சங்கத் தின் விசேட கூட்ட மொன்றை ஸ்ரீமுகஞு பங்குனி மீ 4 ந் திகதி (17 - 3 - 34) சனிக் கிழமைசாயந்தரம் 4மணி அளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கூட்டுதல் வேண்டும்.

3. இத்துடன் வைத்திய மகாநாட்டைத் திறப்ப தற்காகக் கனம் பெரிய சுகாதார மந்திரி அவர்களை அழைக்கல் வேண்டும்.

## இலங்கையில் பிரிட்டிஷ் மோட்டாரதங்கள்.

சென்ற வருஷம் முடிய 1 585 000 ரூபா பெறுமதியான மோட்டாரதங்கள் இலங்கையில் இறக்குமதியாயிருக் கின்றன. அவற்றுள், 1,463,000 ரூபா பெறு மதியானவை பிரிட்டிஷ்ரதங்கள் என்று துறைமுகப் பகுதியாரின அறிக்கை யொன்று கூறுகிறது.

## ஐரோப்பியருக்கு மோட்டர் விபத்து.

கொழும்பு பிறவுண் கம்பனியில் என் ஜினியராகவிருந்த மிஸ்ரர் பிராகக் பிரி யன் என்பவர் சென்ற புதன்காலைக் துலா என்னுமிடத்தில் தமது மோட்டர் ரதத் திற் செல்லும்போது ரதம் புரண்டதால் உடனே மரணமடைந்தார்

## சாராயம் வடிப்போருக்கு ஊக்கம்

மணமற்ற கல்லசுவையுள்ள சாராயம் உற்பத்தியாக்குவோருக்கு அநுமதிப் பத்திரங்கள அளிக்க இலங்கை உள் நாட்டு மந்திர நிர்வாக சபையார் தீர்மா னித்திருக்கின்றனர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## இந்தியச் செய்திகள்.

——*——

### அடிகளின் மிதுனபுரி விஜயம்.

மகாத்மா காந்தியடிகள் வங்காளத்திற்கு விஜயம் செய்யும்போது மிதுனபுரிக்குச் செல் வது அரசினரால் விரும்பப்படத் தக்கது அல்ல என்று வங்காளச் சட்டசபையில் அரசினர் சார் பாக மிஸ்ரர் றீட் என்பவர் கூறினர்.

### பீகாரில் ஹிந்து ஆலயங்கள்.

பூகம்பத்தினுல் அழிந்த ஹிந்துக் கோயில்களைத் திரும்பிக் கட்டுதற்கான முயற்சி இப்போது ஆரம்பிக்கப்பட்டி ருக்கிறது. தர்பங்கா மகாராஜா, டக்டர் மூஜி, கோஸிம பஜார் மகாராஜா, சேலம் விஜயராகவாச்சாரியர், ஸ்ரீ சச்சி தானந்த சிங்கா முதலியோர் இது விஷ யத்திற் சிரத்தை யெடுக்கின்றனர்.

### எல்லைப்புறக் காந்தி.

வடமேற் கெல்லைப்புறக்காந்தி யென்றழைக் கப் பெயரும், சட்டமறுப்புச் சம்பந்தமாகத் தற்போது சிறைவாசம் அனுபவிப்பவருமான அப்தல் கபூர்கான் அவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென வடமேற்கெல்லைப்புறச் சட்ட சபை அங்கத்தவரான பீர் பாக்ஷ் என்பவர் தேசாதிபதியைக் கேட்டிருக்கிறார். இவ் விஷ யத்தைப்பற்றி ஆராய்ந்து முடிவுசெய்வதாகத் தேசாதிபதி வாக்களித்திருக்கின்றனர்.

### சுயராஜ்யக்கட்சி ஸ்தாபனம்.

காலஞ்சென்ற பண்டிதர் மோதிலால்நேரு, தேசபந்து சித்தரஞ்சனதாஸர், ஸ்ரீ ரங்கசுவாமி ஐயங்கார் முதலாயினோரால் ஸ்தாபிக்கப்பட்டு சட்டமறுப்பின்பின் கலைக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியை மீண்டும் ஸ்தாபிக்க வங்காள சட்ட சபைத் தலைவர் டக்டர் பீதன் சந்திரராய், டக் டர் அன்ஸாரி, ஸ்ரீ சத்தியமூர்த்தி முதலாம் தலைவர்கள் முயற்சி செய்து வருகின்றனர். ஹிந்து கட்சியினரின் மகாநாடொன்று மார்ச்மாதம் 15-ம் 16-ம் 18-ம் திகதிகளில் டெல்லியிற் கூடும் என டக்டர் அன்ஸாரி அவர்களின் சார் பாக டக்டர் பீதன் சந்திரராய் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். சட்டசபை ஸ்தானங்களைக் கைப்பற்றி அரசினரோடு வாதிட்டு நாட்டின் நன்மைக்காவனவற்றைச் செய்தல் சுயராஜ்யக் கட்சியின் நோக்கங்களில் ஒன்றாகும்.

### பீகார் நிலைமை.

"பீகாரின் பிரதான பட்டினங்களில் 65000 வீடுகளுக்குமேல் பூகம்பத்தால் அழிந்து விட்டன. 100 க்கு 25 பேர் விகிதமாக, இல்லமிழந்தவிப்போருக்கு உதவி செய்ய வேண்டுமானுலும் 50 லட் சம் ரூபா இப்போது தேவை. கிராமங்க ளின நிலைமை மிகவும் பரிதாபத்திற்கிடமா னதாகும். அங்கு வசிக்கும் பெரும்பான் மையான மக்களுக்கு உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை. கிராமங்களில் இப்போதே பின்னையோ பஞ்சம் ஏற்ப டும் நிலைமையில் இருக்கிறது. உணவுக்கு வழியில்லாமல், அருவருப்பான சுத்தை களைத்தாவும் உண்ணுகிறார்கள். உண வுக்கான தானியம் எதுவும் இந்தக் கிரா மங்களில் இல்லை. இந்த நேரத்தில் உதவி செய்யின" என்று பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

### தாமரைப்பூப் பறிக்கச்சென்ற வாலிபன் கதி.

பலாலி என்னும் ஊரைச் சேர்ந்த வேலுப் பிள்ளை என்பவர் சென்றவாரம் பிற்பகல் 3½ மணியளவில் தன்னூலிலுள்ள தாமரைத் தடாகத்தில் தமது நண்பர் ஒருவரின் கேள்விப் படி தாமரைப் பூக்கள் பறிக்கும் நோக்கத்துடன் இறங்கினர். அப்போது அவர் தாமரைக் கொடிக்குட் சிக்கி நீரின் மூழ்கி இறந்தார். அவரை மீட்கப் பலர் பிரயத்தனப்பட்டும் பயன் படவில்லை.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகவருஷ மாசிமீ ௨௨௳ திங்கட்கிழமை.


## ஆத்திரத்தினாற் பிதற்றுகிறார்.

**J. T.** மியூர்ஹெட் என்னும் மனுஷன் ஒரு வெள்ளைக்காரன். இந்த முழுமகனை இலங்கையிலே சிலகாலம் அரசினரின் குறித்த நிபந்தனையுடன் நீர்ப்பாய்ச்சற் பகுதி உத்தியோகத்தனாக நியமித்திருந்து சென்ற வருடம் நிபந்தனைக்காலம் முடிய உத்தியோகத்தினின்றும் அரசினர் விலக்கி விட்டனர். குறித்த மியூர் ஹெட் இலங்கையில் அந்த உத்தியோகத்திலிருந்தே சீவனஞ் செய்யலாமென்று முயன்றும் வாய்க்காமையால் தான் பிறந்த நாடாகிய இங்கிலாந்திற்கு மீண்டும் போகவேண்டி ஏற்பட்டது. துரதிஷ்டத்தினாற் போலும், வேறு எதும் உத்தியோகம் இதுவரையில் அந்த வெள்ளை மனுஷனுக்குப் பூமியில் எந்தப் பாகத்திலாயினும் அகப்பட வில்லைபோலும். இதனால் அந்த ஆள் இலங்கை வாசிகள் இலங்கை அரசினர் இங்குள்ள ஐரோப்பியர் முதலிய எல்லாரையும், அவ்வளவோ டமையாமல், இலங்கையிலுள்ள எருமை, கழுதை, மாடு முதலிய மிருகங்களையும் மரங்கள் மலைகள் நதிகள் குளங்கள் முதலாம் சகல இயற்கைப் பொருள்களையும் கண்டித்து வைது தூற்றி அருவருத்து வெறுத்து எழுதி அந்த ஆபாசங்களை ஒரு புத்தகமாக அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். சுருங்கச்சொல்லுகில் மிஸ் மேயோ என்னும் மூத்தவள் இந்தியாவிற்கு மாறாக எழுதிய தன்மைபோலவே, இந்த வெள்ளைச் சென்மமும் இலங்கைக்கு விரோதமாக ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறது. வேலையைவிட்டுப் போகும்படி அரசினர் தனக்குக்கட்டளையிட்டமைகாரணமாகஎழுந்த ஆத்திரத்தினாற்றான் இப்பேதை இப்படித் தூற்றத்தொடங்கியிருக்கின்றதென்பது எவருக்கும் விளங்கக் கிடக்கின்றது. ஆற்றாமையினால் இப்பிணக்கன் இலங்கைக்கு மாறாக எழுதி வெளியிட்ட அந்த நச்சு நூலிலுள்ள சில நிந்தையுரைகளை மாத்திரம் இற்றைப் பிரசுரத்தில் பிறிதோரிடத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளோம்.

> "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
> பத்தர் சொன்னவும் பன்னப்படுவோ."

என்றவிதமாக விசரன் பைத்தியகாரன் மூடன் மூர்க்கன் ஈனன் என்னுமிவர்கள் தங்கள் பைத்தியம் பேய்த்தனம் ஆத்திரம் குரோதம் இவை காரணமாகச் சொன்னவைகளை உலகத்தில் அறிவுடையோர் எவரேனும் நிந்தகாசஞ் செய்து அவர்களிடத்து இயல்பாக அமைந்த குறையின் பொருட்டு அநுதாபப்படுவ ரல்லாமல் அவர்களுக்குச் சமாதானம் எழுதுவார் இலர் எனலாம். ஆனால் எழுதியவன் பேயன் பித்தன் பைத்தியகாரன் மூர்க்கன் மூடன் என்ற உண்மையை அறியாதவர்களும் இலங்கையைப் பற்றி உள்ளபடி யறியாத வேற்றுத் தேசத்தவர்களும் குறித்த பேதை ஆத்திரங்கொண்டெழுதியதற்குக் காரண மறியாதவர்களும் சிற்சில சமையங்களில் அப்புத்தகத்தைப் படித்துவிட்டு இந்த இலங்கையையும் இலங்கைவாசிகளையும் கேவலமாக நினைத்தல் கூடுமென்ற நியாயம்பற்றி, இலங்கையில் வெளியாகும் பிரதான பத்திரிகைகளெல்லாம் உண்டவீட்டிற்கு இரண்டகஞ் செய்த இந்த வெள்ளை மனுஷன் எழுதிய ஆபாசங்களை நிராகரித்து எழுதிவருகின்றன. ஆதலால் அந்த அயிரோப்பியன் விஷயமாக இங்கு நாமும் சில கண்டித்து எழுதுதல் மிகையாகமாட்டாது.

காமாலை நோயாற் பீடிக்கப்பட்டவனுக்குப் பார்ப்பனவெல்லாம் மஞ்சள் நிறமாகப் புலப்படுதல்போல இந்த அயிரோப்பியனுடைய கண்களுக்கு இலங்கையின் இயற்கைத் தோற்றங்கள்தாமும் விபரீதமாகவே புலப்படுகின்றன. இலங்கை அரசினர் இந்த அறிவிலியை உத்தியோகத்தினின்றும் விலக்காமல் பின்னரும் நீடித்தகாலம் திரமாக நியமனஞ்செய்து கொழுத்த சம்பளமும் கொடுத்து வந்தால், இலங்கைவாசிகள் இவ்வயிரோப்பியன் கண்களுக்கு விசேஷமாகத் தான் புலப்படுவர் அவர்களுடைய நடையுடை முதலியனவும் நன்மையாகவே தோற்றியிருக்கும். இலங்கையிலுள்ள மிருகங்கள் பட்சிகள் நீர்வாழ்வன ஊர்வன தாவரப்பொருள்களெல்லாம் இந்த அயிரோப்பியனுக்கு இதமாகவே தோற்றியிருக்கும்.

இனி, இந்தத் துராத்மா யாழ்ப்பாணத்தவரைப்பற்றி என்ன சொல்லுகின்றதென்று பார்ப்போம்:

> "யாழ்ப்பாணத்தக் குடிசனங்கள் (ருசியாவிலுள்ள) பொல்ஷவிக் கட்சியாருடைய இயல்புடையவர்கள்; அவர்களுடைய பிரதான தொழில் புகையிலைச் செய்கையும், சோரமாக அபின் கஞ்சா விற்பதும், அயிரோப்பியரைக் கண்டாற் சினந்து வெறுப்பதுமேயாம்."

யாழ்ப்பாணமக்களின் இயல்பும் தொழிலும் இந்தப் பேதைக்கு இப்படிப் புலப்பட்டதேனோ? இலங்கைவாசிகளுள் யாழ்ப்பாணத்தவர்களே நல்ல சுவாசமுள்ளவர்கள் அரசவிசுவாசமுள்ளவர்கள் கலகத்தை வெறுப்பவர்கள் நேர்மையானவர்கள் என்று அரசினர் காலந்தோறும் வெளியிட்ட அறிக்கைப் பத்திரங்களைக்கொண்டும் இங்கு வந்து மீண்ட அயிரோப்பிய உத்தியோகத்தர் தேசசஞ்சாரிகள் சொன்ன மதிப்புரைகளைக் கொண்டும் அறியலாகுமே சோரமாக அபின் கஞ்சா விற்போர் யாழ்ப்பாணத்தில் உண்டென்பது மெய் ஆனால் இந்தப் பேதை அதுதான் யாழ்ப்பாணத்தவர்கள் செய்யும் பிரதான முயற்சிகளிலொன்றென்று இங்குள்ளாரெல்லாரையும் சேர்த்து அபாதஞ் சொல்லலாகுமா? ஏனைய இலங்கைவாசிகளிடத்தும் யாழ்ப்பாணத்தாரிடத்தும் உள்ள நற்குணம் ஒன்றேனும் சற்கருமம் ஒன்றேனும் இந்த விபரீத மனுஷனுக்குப் புலப்படவில்லையா? ஒருவர் குணம் புலப்படாதொழியக் குற்றமே பலபோற் புலப்படுதலால் இம்மனுஷன் கீழ்மகன் என்பது தெள்ளிதில் புலப்படுகின்றதல்லவா?

> "உண்டு குணமிங் கொருவர்க் கெனினும் கீழ்
> கொண்டு புகல்வதவர் குற்றமே........"

என்னும் பெரியார் வாக்குக்கு இந்த மேனாட்டு மானுடன் தக்க திருஷ்டாந்தமல்லனோ! ஈ எப்பொழுதும் ஒருவர் உடம்பிலுள்ள புண்ணிலேயே தேடிப்போய் மொய்க்கும். அதன் தன்மைபோல, குணங்கள் புலப்படாது குற்றங்கள் மாத்திரம் தம் கண்ணுக்குப் புலப்படுவார் சிலர் எங்குமுண்டு. ஆனால் இலங்கையில் வந்து இங்கே சில காலமேனும் கொழுத்த வேதனம் பெற்று விலாப்புடைக்க உண்டு உடுத்துக் குடித்து வெறித்து ஒரு பெருந்தொகைப் பொருளைத் தன் நாட்டிற்குக் காலந்தோறும் அனுப்பி விட்டு, உத்தியோகத்தை விடு என்று சொன்னவுடனே வெகுண்டு அரசினரோடும் இலங்கைவாசிகளோடும் நீதியோடும் மனச்சாட்சியோடும் மாறுபட்டு நச்சுவார்த்தை கக்கிய அயிரோப்பியன் இந்த ஒருவனுந்தானென்றே நினைக்கிறோம். அவரவர் கொண்ட கோலத்தை யாரால்மாற்ற முடியும்? "பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாம்" என்பது பழமொழி

### அவர் சொல்வது அத்தனையுஞ் சரி.

இப்பொழுது இங்கே நடைபெறும் சுப்பிறீங்கோட்டு விசாரணையில் நீதியரசர் டால்டன், கத்திபாற் குற்றி ஊறுபடுத்திய வழக்கொன்றில் எதிரிக்கு இரண்டு வருடக் கடுங்காவற்றண்டனை விதித்தபோது பின்வருமாறு கூறியுள்ளார்.

> "சென்ற சில வருடகாலமாக இந்த வடமாகாணத்தி லுள்ளவர்கள் கத்தியாற் குற்றுதலாகிய தீமை அதிகப்பட்டு வருதலை அவதானித் தள்ளேன்; இந்தத் தீமையை இயன்றவரையில் தடுத்துவிடுதல் வேண்டும்."

இந்நீதியரசர் சொன்னது முழுவதும் நிசம். கத்திச்சண்டைக்கும் ஏனைய கலகங்கட்கும் ஒரு காலத்திற் கூசிநின்றவர்கள் இந்த யாழ்ப்பாணத்தவர்கள். இத்தீயசெயல் சிங்களநாட்டிலேயே முன்னர் அதிகமாயிருந்தது. இவர்கள் இப்பொழுது பொல்லாத துஷ்டர்களாக இங்ஙனம் கத்தி விரித்துக் குற்றவும் எடுத்து வெட்டவும் தலைப்பட்டமைக்குக் காரணம் ஊரவர்களாய்க்கூடி எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பொருள் செலவிட்டு எத்தனையோ காலமாக முயற்சிசெய்து தவிர்த்துவிட்டதவறணைகளை அரசினர்பழையபடி திறக்கச்செய்து மதுபானத்தை விருத்தியாக்கி விட்டமையேயாகும். இத் தவறணைகள் இங்குதிறக்கப்பட்டபோதே தீமைகளும் குற்றங்களும் அதிகப்படுமென்பது அரசினருக்கு நன்கு தெரியும். அவர்கள் தெரிந்தும் தெரியாதுபோல் இருக்கிறார்கள். தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையுங் கிள்ளிவிடுதல் போன்ற செயல் நமது காருண்ணியம் பொருந்திய அரசினரிடத்து இயல்பாகவுண்டென்பது எவரும் அறிந்த இரகசியம். தவிர்த்த தவறணைகளைப் பின் திறக்க வேண்டாமெனவும், மறந்த மதுபானத்தைப் பின் நினைப்பூட்ட வேண்டாமென்றும் அரசினருக்கு இப்பத்திரிகை வாயிலாகப் பல முறை எடுத்து இடித்து உரைத்துள்ளோம். உரைத்தும் அடைந்த பயன் எதுமில்லை. ஏன்? நித்திரையாய்க் கிடப்பவனை எழுப்ப முடியுமேயல்லாமல் நித்திரைபோற் கிடப்பவனை எழுப்புதல் முடியுமா?

## யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு

### வேலணைப் பெண்சோரவழக்கு

### 5 எதிரிகள் குற்றவாளிகள்.

வேலணையைச்சேர்ந்த கு. முருகேசபிள்ளை என்னும் சோதிடரின் மகள் வைத்தி அம்மா அல்லது தேவகி என்பவளை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூர் வாசிகளாகிய (1) நருவவகுப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜோசேப் (2) கோவியவகுப்பைச்சேர்ந்த கந்தையா முருகேசு (3) கருவவகுப்பைச் சேர்ந்த சுப்பர் சின்னையா (4) எஸ். பொன்னுத்துரை (5) நந்திறிஸ் அப்பு அல்லது ஜேம்ஸ் அப்புகாமி என்னும் சிங்களவன் (6) அந்தோனிப்பிள்ளை ஆபிரகாம் என்பவர்கள் கடத்திச் சென்று, பலவந்தமாகக் கற்பழித்து வருத்தினார்கள் என்னும் இன்னோரன்ன 12 குற்றச் சாட்டுகள் பாரிக்கப்பட்டார்கள்.

இந்த வழக்கு சென்ற மாதம் 25ம் தேதி தொடக்கமாகச் சென்ற வெள்ளிக்கிழமை வரையில்நடந்தது. விசாரணை முடிவில் 5ம் எதிரியான நந்திறிஸ் அப்புகாமியைவிட ஏனையோர் குற்ற வாளிகளென ஜூரிமார் அபிப்பிராயங் கூறினர். நீதிபதி தமது தீர்ப்பை இன்று (திங்கள்) கூறுவதாகச் சொல்லி, 5ம் எதிரியை ஒழிந்த ஏனையோரை விளக்கமறியலில் வைக்கும்படி கட்டளையிட்டார்.

### கால நிலை.

வெயிலும் பனியும் அதிகம். அரிவிவெட்டு முடிந்துவிட இப்பொழுது வயல் வெளிகளிற் சூடு மிதித்தல் அதிகமாக நடைபெறுகின்றது.

### இலங்கைத் தேசியமகாசபை

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இலங்கையைப்பற்றி நடந்த விவாதத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காக அகில-இலங்கைத் தேசியமகா சபையில் நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று இன்று (5-3-34) பின்னேரம் 5 மணியளவிற் கொழும்பிற் கூடும்.

### நீதிஸ்தலத்தில் அடித்த ஆறுமுகம்.

சென்ற புதன்கிழமையன்று திருநெல்வேலியைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் என்பவர் இளையதம்பி வேலுப்பிள்ளை, இளையதம்பி கந்தையா என்னும் இருவரை பொலிஸ் நீதிஸ்தலத்து விறாந்தையில் அடித்தார் என்று உடனே பொலிஸ் நீதிபதி முன்னர்க் குற்றஞ் சாட்டப் பட்டார். எதிரிக்காக பிறக்றர் ஸ்ரீ கே. வீ. சின்னத்துரை ஏற்பட்டனர். இளையதம்பி வேலுப்பிள்ளை கூறியதாவது: எதிரி திருநெல்வேலியில் வசிப்பவர்; தனக்குத் துன்பம் இழைத்தாரென்று அவர் என்மீது இந்தப் பொலிஸ் கோட்டில் வழக்கு வைத்தார். அவ்வழக்கு இன்று தவணையிடப்பட்டது. நீதிஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டு வெளியே வரும்போது ஆறுமுகம் என்னையும் என் சகோதரர் கந்தையாவையும் அடித்தார்.

இதன்பின் கந்தையா சாட்சியங் கொடுத்தார்.

விசாரணையின்பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு அவருக்கு ஒரு மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் 50 ரூபா அபராதமும் விதித்தார்.

## நீதியரசர் மோட்டாரிற்கு கல்லெறி.

### ஆனைக்கோட்டையில் நடந்த சம்பவம்.

### எதிரிக்கு 15 ரூபா அபராதம்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி இரத்தினம் என்பவர், யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டுநீதியரசர் L. C. டால்டன் அவர்கள ஊர்காவற்றுறைக்கு மோட்டர்ரதத்திற் செல்லும் வழியில் அம் மோட்டர் ரதத்திற்குக் கல்லால் எறிந்து விளக்கு ஒன்றை உடைத்தாரென்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ் சாட்டப்பட்டார்.

எதிரிக்காக நியாயதுரந்தரர் மிஸ்டர் சாம் ஏ. சபாபதி ஏற்பட்டனர். நீதியரசர் ஊர்காவற்றுறைக்கு ஆனைக்கோட்டை மார்க்கமாகச் செல்லுகையில், எதிரி ஓர் எருதுமாட்டுடன் எதிரே வந்து ரதத்திற்குக் கல்லால் எறிந்தார் நீதியரசர் உடனே இறங்கி எறிந்தவரின் பெயர் விலாசம் என்பனவற்றைப் பதிவுசெய்து கொண்டு பொலிஸ்தானத்தில் அறிவித்தார்.

எதிரி தான் குற்றவாளியே என்றும், வேண்டுமென்று நீதியரசரின் ரதத்திற்குத் தான் எறியவில்லையென்றும், சிலமாடுகளுக்கு எறிந்த கல்லே மோட்டரிற் பட்டது என்றும் சொன்னார்.

விசாரணையின் பின் பொலிஸ் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 15ரூபா அபராதம் விதித்தார் இதில் 12 ரூபா நீதியரசருக்கு அளிக்கப்படல் வேண்டும் என்று உத்தரவிட்டார்.

நீதியரசர் பணத்தைப்பெறாது, ஏதும் தருமஸ்தாபனத்திற்கு அதனை அனுப்ப வேண்டும் என அறிவித்திருக்கிறார் என்று அறிகிறோம்.

### பேராசிரியர் ஸ்ரீ சுந்தரலிங்கம்.

நடக்கப்போகும் அரசாங்கசபை உபதேர்தலில் யாழ்ப்பாணப் பகுதிப் பிரதிநிதியாய் வருவதற்காகச் சர்வகலாசாலையில் தாம் வகித்துவந்த பேராசிரியர் பதவியினின்றும் விலக அறிவித்தல் கொடுத்த ஸ்ரீ சீ. சுந்தரலிங்கம் அவர்கள் நன்கு ஆலோசித்ததன்பேரில் தம் பதவியினின்றும் இப்போது விலகுவதில்லை யென்று தீர்மானித்திருக்கின்றனரென்றும் அதன்படி தேசாதிபதிக்கு அறிவித்திருக்கின்றனர் என்றும் அறிகிறோம். ஸ்ரீ சுந்தரலிங்கம் யாழ்ப்பாணப்பகுதிப் பிரதிநிதியாக முற்படவில்லையென்று தெரிகிறது.

### அரசாங்கசபை உபதேர்தல்.

வடமாகாணத்தவர் தம் பிரதிநிதிகளை அரசாங்கசபைக்கு அனுப்புதற்கான நியமனநாள் நெருங்க நெருங்க அபேட்சகர்களும் தமக்குப் பக்கப்பலம் மும்முரமாகச் சேர்த்து வருகின்றனர். பின்வருவோர் அவ்வப்பகுதிக்கு அபேட்சகராக நிற்கின்றனர் என்று இப்போது அறியக்கிடக்கின்றது:

யாழ்ப்பாணப் பட்டினமும் தென்மராட்சியும்: ஸ்ரீ க. இராசரத்தினம்; மிஸ்டர் எச் ஏ பி சந்திரசேகரா கே. ஸீ.; ஸ்ரீ அ. மகாதேவா.

ஊர்காவற்றுறை: மிஸ்டர் செவின்ஸ் செல்வத்துரை; மிஸ்டர் ஜே வீ. அமரசிங்கம்; மிஸ்டர் ஜே. வீ. செல்லையா; முதலியார் த. காசிப்பிள்ளை.

காங்கேசன்துறை: ஸ்ரீ சு. நடேசபிள்ளை; ஸ்ரீ ஜே. தியாகராசா; ஸ்ரீ எஸ். சரவணமுத்து:

பருத்தித்துறைக்கு: G. G. பொன்னம்பலத்தைவிட வேறெவரும் அபேட்சகராக இற்றைவரை முன்வரவில்லை.

### உபகாரச் சம்பளம் அதிகரித்து விட்டது.

சென்ற வருடத்தில் இலங்கைவரவு செலவுத்திட்டத்தில் குறிக்கப்பட்டதிலும் பார்க்க உபகாரச்சம்பளத் தொகை அதிகம் கூடிவிட்டதாக அறிகின்றோம். ஆகையால் வருகிற செவ்வாய்க்கிழமை நடக்கவிருக்கும் அரசாங்கசபைக் கூட்டத்தில் 17,965 ரூபா 79 சதம் உபகாரச் சம்பளக்கணக்கில் மேலதிகம் விடுமாறு கேட்கப்படுமாம். இந்தத் தொகை உபாத்திமாருக்கும், விதவைகளுக்கும், அனாதைகளுக்கும், ஒவசியருக்கும், யுத்தத்தில் காயமடைந்தோருக்கும், வேறு உபகாரமாய்க் கொடுத்தவகையிலும் ஏற்பட்ட நட்டமாம்

## பயனுள்ள கல்வி.

(1-ம் பக்கத் தொடர்.)

கற்குநூல் இதுவென நிச்சயித்துக் கொண்டவழி அதனை நுணுகவாராய்ந்து கற்றல்வேண்டும். பருப்பொருளாக நூறு நூல்களைத் தெளிவுபெருவண்ணம் உளத்துட் கொள்வதினும்பார்க்க ஒரேயொரு நூலினை நுண்ணிதினுராய்ந்து தெளிவுற அறிந்துகொள்ளுதல் சிறந்தமுறையாகும். ஆசிரியனது கருத்தாகிய பொற்றிரள் பல சொல்லிடையே மறைவுற்றுக் கிடக்கும், பொன்னைப் பிரிக்கும் வகையால் உருக்கி யொன்றுகூட்டும் பொற்கொல்லரைப்போல அறிவென்னுந் தீயினிடையே நூலாசிரியனுடைய சொற்களைப் பெய்து உறுதிப்பொருளைப் பயக்கும் உண்மை வாசகங்களைப் பிரித்தெடுத்து ஒன்றுகூட்ட வேண்டும். இதுவே பயனுள்ள கல்வி பெற விழைவார் கைக்கொள்ளவேண்டிய முறையாகும். நூலினை எழுத்தெழுத்தாக நோக்கி வனறி வவதானித்து உண்மைப் பொருள் காண்போனே "எழுத்தறிந்த பண்டிதன்" எனப்படுவான். மேனாட்டுப் பல்கலைக் கழகங்களிலே வழங்கப்படும் அதியுயர்ந்த வித்தியாபட்டமும் (Doctor of Letters) இப்பொருண்மையதே. இக்காலத்துப்பரீட்சைகளுக்குக் கற்போர் சுருங்கியகாலவெல்லையினுள்ளே பல நூல்களைக் கக்க முயல்வாராதலினால் அன்னார் ஒரு நூலினைத்தானும் தெளிவுற அறிந்து கொள்வதில்லை; அவரது கல்வி நல்லாரவைக்களத்துச் சென்று நிலைபெறுவதுமில்லை. எடுத்த நூலினைத் தெளிவுற வாராய்ந்து அறிந்தவனுக்கு அதனிடத்தே யெய்துவதொரு உறுதிப்பாடுண்டு. அத்தகைய உறுதிப்பாடு காரணமாக அவையஞ்சாமையாகிய சிறந்தகுணம் ஏற்படும். தெளிவில்லாவிடத்து நெஞ்சிற்கணெய்துவதொரு கலக்கமுண்டு. மேலும்

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு."

என்றாராகலின், பிறர்வாய்க் கேட்குஞ் சொற்களின் நுண்ணிய பொருள் காண அரிதாயினும் அதனைக் காண வல்லதே அறிவு என்றறிதல்வேண்டும்.

"நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று"

என்புழியும் நுணுகி நோக்கி யாராய்தல் அறிவிற்கு மாட்சிமையைத் தருவதென்பது பெறப்பட்டது.

உளப்பயிற்சிக்குச் சாதனமாகக் கட்புலனையுஞ் செவிப்புலனையுங் கூர்ந்தவதானிக்குமுறையிற் பயிற்றுதல் வேண்டும். கண்ணிருந்துங் காணுத மாந்தர் பலருளர்; செவியிருந்துங் கேளாத மாந்தர் பலருளர். பகற்கனவு காணும் நிலையிலே என்றும் உண்ணோக்கிய சிந்தையோடு புறத்தேநிகழ்பவற்றைக் கருதாதிருப்பது யோகசாதனையென்றும் வேதாந்தநிஷ்டையென்றுஞ் சிலர் தவறாக நினைக்கின்றனர். பகற்றூக்கம் யோகமன்று; தூக்கமையே யோகமென்பது யோகநூற்றுணிபு. மூலையிலே சுத்தசத்தம் செறிந்து கருவிகரணங்களெல்லாம் பூரண விழிப்புநிலையிலிருக்கும்பொழுது நம்மைச்சூழவிருக்கும் பிரபஞ்சம் என்னும் ஏட்டினைப் படித்து நாம் அறிவைப்பெறுதல் கூடும். பௌதிகங்களைப்பற்றிய ஆராய்ச்சியே மேனாட்டாருக்கு உயர்நிலையளித்த விஞ்ஞான சாஸ்திரமாகும்.

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு."

என்ற பொய்யாமொழியின் பொருளும் ஈண்டு நுணுக நோக்கி யுணரற்பாலது.

கண்ணுஞ் செவியும் கருவியாக நுண்ணிதின் நோக்கவல்ல மாந்தருக்கு எண்ணின் றிறமனைத்தும் இனிது நிறைவுறப்பெறுமாதலின் கணிதநூலுணர்ச்சிக்கும் புலன்களைப் பயிற்றுதல் இன்றியமையாத சாதனமாகும்.

"கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியி[ன்]"

னன்னயப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்[தே]
என ஆசிரியர்தொல்காப்பியனாரும் உரைத்துச் சென்றார். கண்ணினையுஞ் செவியினையும் பயிற்றும்பொருட்டு மாணாக்கருக்கு ஓவியக்கலையையும் இசைக்கலையையும் ஒரு சிறிதாவது அறிவுறுத்துதல் நலமாகும்.

எண்ணூலும் இலக்கணநூலும் புவியியல்நூலும் வரன்முறைநூலும், பூதபௌதிகநூலும், ஓவியநூலும், இசைநூலும் என்றிவை பதினாறாட்டைப் பராயம் புகுமுன்னர்க் கற்றற்குரிய கருவிநூல்களாமெனவும் அவற்றைக் கற்குந்திறம் இதுவெனவும் ஆராய்ந்தாம் இனி உடற்பயிற்சியைவிசாரிக்கப்புகுமுன் மேற்கூறிய நூல்களுள் பள்ளிப்படிப்பிலே கொள்ளற்குரிய அளவு இதுவென ஒருவாறு வரையறுத்துரைத்து அப்பாற் செல்வாம். (வரும்) "தனவணிகன்"

# தற்போதைய அரசியல் நிலைமை

## தமிழர் வகுப்புவாதம் கருதியா அரசியலைப் பகிஷ்கரித்தனர்?

## சிங்களரின் விபரீத எண்ணமும் ஜனத்தலைவர்களின் விளக்கமும்.

## சட்டநிரூபணசபைக் கூட்டக் குறிப்புக்கள்.

## திரு. பாலசிங்கத்தின் சீரிய வேண்டுகோள்

—:*:—

[தமிழ்த் தலைவர்கள் வகுப்புவாதம் கருதியே டொனமூர் அரசியலைப் பகிஷ்கரித்தனர் எனச் சில கோடரிக்காம்புகள் சொல்வன அனைத்தும் பொய் என்பதைக் காட்டுவான் பொருட்டு, ஸ்ரீ பாலசிங்கம் சட்டநிரூபணசபைக் கூட்டக் குறிப்புக்களில் இருந்து அநுவதித்து வெளியிடுவன நன்கு அவதானிக்கப்படவேண்டியனவாம்.]

(1—3—34-ன் தொடர்ச்சி.)

நான் மேலே காட்டியவற்றிலிருந்து, ஒரு விஷயம் தெள்ளிற் புலப்படும் என்பதே எனது அபிப்பிராயம். அதாவது: அரசியற் சீர்திருத்த விஷயத்தில் இலங்கை மக்களுக்குள்ளேயே பரஸ்பரம் ஒற்றுமையில்லை என்ற சாட்டைக் கொண்டு குடியேற்றநாட்டு மந்திரி தற்போது அரசியற்சீர்திருத்தம் சம்பந்தமான எப்பிரேரணையையும் சிந்திக்கமாட்டார் என்டதே!

தமிழராகிய எமக்கு இப்போது ஆவசியகம் தேவை என்ன? இந்த இலங்கையில் வசிக்கும், ஏனைய சாகியத்தாருடன் நட்புப்பூண்டு அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றவர்களாக விளங்கவேண்டும். எமக்கும் அவர்களுக்குமுள்ள சம்பந்தம் அன்பை அடிப்படையாகக் கொண்டதாயிருத்தல் வேண்டும். அதற்கான வழிவகைகளை நாம் கையாளல்வேண்டும். அரசியற்றிருத்தத்திலும் பார்க்க மற்றச்சாகியத்தினரின் நன்மதிப்பே எமக்கு இப்போது முக்கியமானதும் ஆவசியகம் வேண்டற்பாலதுமாகும். டொனமூர் அரசியற்றிட்டத்தைத் தமிழர் எதிர்த்தது சுயாட்சி விரும்பியல்ல; அத்திட்டம் நிராகரிக்கப்பட்டவுடன் சட்டசபையில் சிங்களரிடமிருந்து இன்னும் கூடிய ஸ்தானங்களைப் பறிக்கலாம் என்ற நோக்கம் பற்றியே எனச் சிங்களர் எம்மைப்பற்றி நினைக்கத் தக்கதாக நாம் நடக்கவொண்ணாது. அவர்கள் அப்படி எண்ணுவது எமக்கு நன்மை விளைக்காது. தமிழராகிய நாம் சுயநலங்கருதியே, அதாவது கூடிய ஸ்தானங்களைப் பெறுவதற்காகவே பாடுபடுகின்றோம் என்று இப்போது சிலகாலமாகச் சில சிங்களர் பிரசங்கங்கள் செய்தும், பத்திரிகைகளில் எழுதியும் வருகின்றார்கள். இதற்காக, நாம் அவர்களைக் குறைகூறவொண்ணாது! ஏன்? தமிழர்களிற் சிலரும் சில கூட்டங்களில் தாங்கள் கூடிய ஸ்தானங்கள் பெறவேண்டும் என்றே சொல்லியிருக்கிறார்களல்லவா?

டொனமூர் அரசியற்றிட்டம் 1929-ம் ஆண்டு இரண்டாம் முறையாக விவாதிக்கப்பட்டபோது தமிழ் மக்களும், ஏனைய அங்கத்தவரும் தமிழர் நிலை சம்பந்தமாகப் பேசியமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது:-

சேர். பொன். இராமநாதன்: "இந்தத் திட்டம் நாசமானது, இதனால் ஆம்பயன் யாதுமில்லையென்பது காலகதியில் தெரிய வரும். ஓர் இடையூறுமின்றி இத்திட்டத்தின்படி பரிபாலனம் நடக்குமானால், அது அற்புதமாகும்". (சட்டநிரூபண சபைக் குறிப்புப் புத்தகம் 1928-ம் ஆண்டு பக்கம் 1670)

மிஸ்ரர் டபிழ்யு ஏ டீ சில்வா: "தமக்குச் சுயராஜ்யம் வேண்டுமென சேர், பீ. இராமநாதன் எமக்குச் சொல்லிவிட்டார் ............இந்தத் திட்டம் நிறைவேறுமானால், சிங்களரே பரிபாலனம் நடத்துவர்; அதற்கு அவர்களை விடவொண்ணாது என்ற ஓர் எண்ணம் இருக்கின்றமையாலேயே இத்திட்டத்தைத் தமிழர் எதிர்க்கின்றார்கள். (பக்கம் 1675)

மிஸ்ரர் எச். ஏ பீ. சந்திரசேகரா: சிங்களர் ஆட்சி வந்துவிடும் என்று தமிழர் அஞ்சுகின்றனர் என்று மிஸ்ரர் சில்வா ஒருவாறு சுட்டிக்காட்டியிருக்கிறார். அது சுத்தப் பொய்; (பக்கம் 1682) இந்தத் திட்டத்தை நிராகரித்துத் தோற்கடித்த பின்னர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறத் தமிழர் எண்ணியிருக்கின்றனரென்று சிலர் இரகசியம் இரகசியமாய்ப் பேசினர் என்று இன்று காலை எனக்குத் தெரியவந்தது. தமிழ் மக்கள் இவ்வாறு செய்யக்கூடும் என்று எண்ணுவதே பெருந் துரோகமாகும். அப்படி எண்ணுவது ஈனர்களுக்குத்தான் அடுக்கும். (1690 பக்கம்)

இரண்டொரு ஸ்தானங்களை இழக்கவிருப்பதால், யாழ்ப்பாணத்தவர் இப்படி இத்திட்டத்திற்கு மாறாக நிற்கின்றனர் என்று அவர்களை (யாழ்ப்பாணத்தவரை) நீவிர் குற்றம் சாட்டவொண்ணாது. இச்சபையில் இரண்டொரு யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் கூட இருந்தாலென்? குறைய விருந்தாலென்? ஒன்றும் இல்லையே (பக்கம் 1692)

மிஸ்ரர் ஸீ. எச். ஸற் பர்ணாந்து: பூரண பொறுப்பாட்சி வழங்கப்படாமையால் இத்திட்டத்தை (டொனமூர்த் திட்டத்தை) நிராகரிக்கும்படி வடமாகாணத்து நண்பர்கள் எம்மைக் கேட்கின்றனர். இந்த இலங்கையில் 5 லட்சம் தமிழ் மக்கள் இருக்கின்றனர், 40 லட்சம் சிங்களர் இருக்கின்றனர் 5 லட்சம் தமிழர்களுடைய பிரதிநிதிகளின் தொகையிலும் பார்க்க 40 லட்சம் சிங்களரின் பிரதிநிதிகளின் தொகை இருமடங்கினதாக மாத்திரமே இருக்க வேண்டுமென இவர்கள் கேட்டிருக்கின்றனர். இதைத்தானா பூரண பொறுப்பாட்சி என்று அவர்கள் கூறுகிறார்கள்?

தமிழ்மக்கள் கோருவது கூடிய ஸ்தானங்கள் என்றும் தமது கூற்றை நிரூபிப்பதற்காக மிஸ்ரர் பர்ணாந்து சேர். பொன். இராமநாதன் அவர்கள் இது சம்பந்தமாகக் கூறியனவற்றில் இருந்து வாசித்துக் காட்டினார். (பக்கம் 1703)

மிஸ்ரர் சந்திரசேகராவைப்பற்றி மிஸ்ரர் பர்ணாந்து கூறியனவற்றிற்குப் பதிலாக ஸ்ரீ எம். எம். சுப்பிரமணியம் பின்வருமாறு கூறினார்.....

டொனமூர் விசாரணைச் சங்கத்தின் முன்னர் மிஸ்ரர் சந்திரசேகரா இன்ன இன்ன சொன்னார் என்று மிஸ்ரர் பர்ணாந்து இப்போது கூறுகிறார் மிஸ்ரர் சந்திரசேகரா அவற்றைக் கூறியமை சொந்த ஹோதாவில் அன்றி தமிழ்மக்கள் சார்பாகக் கூறவில்லை அவர் இப்போது இச்சபையிற் கூறுவன அனைத்தும் தமிழ் ஜனப் பிரதிநிதி என்ற நிபுதியிலேயே; இந்த அரசியற்றிட்டம் பூரணமற்றதால் அதனை நிராகரித்தல் வேண்டுமென என்னைத் தெரிந்தனுப்பியவர்கள் பணித்திருக்கின்றனர்.

மிஸ்ரர் எல் ஏ. உபயசேகரா: "வகுப்புவாதம் கருதி நாம் இந்த அரசியற்றிட்டத்தை எதிர்க்கவில்லையென்று தமிழ் மக்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்த அரசியற்றிட்டம் அங்கீகரிக்கப்படுமானால், தாம ஒரு ஜாதியாராக இனி அதிகாரம் வகிக்க முடியாதென்றும், டொனமூர்த் திட்டம் அளித்துள்ள ஸ்தானங்களிலும் பார்க்கத் தாம் கூடிய ஸ்தானங்கள் பெறத் தகைமையுடையர் என்றும் தமிழ்மக்கள் எண்ணுகின்றனர் என்பது வெளிப்படை............ 1928-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் தேதி சேர். பொன். இராமநாதன் அவர்கள் பிரதிநிதித்துவம் சம்பந்தமாகச் சொன்னவை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அவை வருமாறு:

"இத்தேச அரசியலில் ஜனத்தொகைக் கேற்றபடி சிங்களருக்குப் பிரதிநிதி ஸ்தானங்கள் அளிக்கப்படுமானால், அந்த அரசியற்றிட்டத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. (இடையில் சேர் இராமநாதன் தடுத்து, 'நான் இப்போது ஒருபோதும் அப்படிச் சொல்லவில்லை' என்றார்) சேர். இராமநாதன் இப்போது தம் கூற்றை மறுக்கலாம். அவருடைய மறுப்பு, மேலங்கையும் தன் புள்ளிகளைக் காலத்துக்குத் தக்கபடி மாற்றும் என்பதை நிரூபிக்கின்றது."

ஸ்ரீ வை. துரைசுவாமி: தமிழ்ப் பிரதிநிதிகளின் மீது சுமத்தப்பட்ட அபவாதம் ஆதாரமற்றது என்பதைக் காட்டுவான் கருதி ஸ்ரீ வை. துரைசுவாமி பின்வருமாறு கூறினார்:

நான் எவரின் பிரதிநிதியாய் இங்கு இருக்கிறேனோ அவர்களின் சார்பாக நான் இப்போது சொல்லக்கூடிய தென்னவென்றால், வகுப்புவாதப் பிரச்சினையை யிட்டு நாம் இந்தத் திட்டத்தை நிராகரிக்கின்றோமில்லை. நான் டொனமூர் அரசியற் சங்கத்திற்கு முன்னால், சிங்களருக்கு 2 பிரதிநிதிகள் இருந்தால் தமிழருக்கு ஒரு பிரதிநிதி வீதம் அளிக்கப்படல் வேண்டும் என்று கேட்டிருக்கின்றேனே என்று மிஸ்ரர் பர்ணாந்து கூறுகிறார். டொனமூர் அறிக்கை வெளிவந்ததும் நாம் வகுப்புவாதப் பிரச்சினையைக் கிளப்பினோமா? (வரும்.)

## இலங்கையர் மிருகங்களாம்!

—(*)—

### பழைய என்ஜினியரின் பிதற்றுரை.

—:0:—

### வேலை நீக்கியதற்குப் பழிக்குப்பழி?

இலங்கையில் நீர்ப்பாய்ச்சற் பகுதி என்ஜினியராக இருந்து, சென்ற ஆண்டு வேலையினின்று நீக்கப்பட்டவரான மிஸ்ரர் ஜே ரீ. மூயிர்ஹெட் என்னும் வெள்ளையர் இலங்கையைப்பற்றி ஓர் புத்தகம் இப்போது எழுதி வெளியிட்டிருக்கிறார். இந்த வெள்ளையர் தனக்குச் சில காலந்திற்சேனும் ஊண் உடை அளித்துப் போஷித்த இலங்கையும் இலங்கை மக்களையும் பற்றி எழுதியுள்ளன அறிஞர் எவராயும் அருவருத்து ஒதுக்கற்பாலனவாகும். மூயிர்ஹெட்டின் மனப்பான்மையைக் காட்டுமாறு அவர் எழுதிய நூலில் இருந்து சிலவற்றை ஈண்டுப் பொறிக்கின்றேம்:

"யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் ருஷியாவில் உள்ள சமதர்மக் கொள்கையில் நாட்ட முடையவர்கள். அவர்களின் முக்கிய தொழில்கள் புகையிலைச் செய்கை, பீடி, கஞ்சா, அபின் என்பன சோரமாக இறக்குமதி செய்து வியாபாரஞ் செய்தல் ஆங்கிலரைக் கண்டவுடன் குலைத்தல் என்பனவே."

* * *

"இலங்கைக்கு உத்தியோகார்த்தமாக இங்கிலாந்திலிருந்து செல்லும் ஆங்கிலர் அங்கு சென்றவுடன் அரசினரால் குற்றவாளிகள் போல் நடத்தப் படுகிறார்கள். சுதேசிகளைப்போல, அவர்களுக்குள்ள குணங்களே இவர்களுக்கும் இருக்கும் என எண்ணிப்போலும் அரசினர் ஆங்கிலரைச் சுதேசிகளுடன் சமமாய் வைத்து நடத்துகின்றனர்.

* * *

நீதிஸ்தலங்களிலுள்ள சுதேச நீதிபதிகள் தமது நிலைமை உன்னதமானதென எண்ணித் தம் சமுகத்தில் வரும் ஐரோப்பிய சாட்சிகளைக் கண்டபடி மானபங்கப் படுத்த எண்ணுகின்றனர். அச்சாட்சிகள் தமக்குக் கீழ்ப்படிந்து கைகட்டி வாய் புதைத்து நிற்பதற்கான கருமங்களைச் செய்கின்றார்கள். இந்த நீதிபதிகளின் தகாத செயலை நோக்கும் ஐரோப்பிய சாட்சி எவனும் சிறிது அருவருப்புற்றானே, அவனுக்குச் சனிதிசை பிடித்து விட்டதென்றே சொல்ல வேண்டும். நீதிஸ்தலத்தை நிந்தை செய்தான் என்று உடனே குற்றஞ் சாட்டப்பட்டுச் சொல்லொணாக் கஷ்டத்திற் காளாவான்.

* * *

இலங்கையிற் சில நாள் வசித்த ஐரோப்பியன் மீளும்போது தான் ஒரு மிருகக் காட்சிச் சாலையினின்று வெளிவந்ததாகவே உணருவான். அங்குள்ள நவீனமான அதிசயமான மிருகங்களுக்குத் தன் பணத்தையெல்லாம் இறைத்து விட்டு, உள்ளதெல்லாம் இழந்து ஓட்டாண்டியாய் மனவருத்தத்துடன் தன் ஜென்ம தேசம் திரும்ப வேண்டும்.

* * *

இந்தத் தீவில் (இலங்கையில்) உள்ளவர்கள் பணத்தையே தெய்வமாக அதிகம் போற்றுபவர்கள். தனது கையொப்பம் தானும் இட அறியாத கொலைப்பாதகனும், கொஞ்சம் பணம் சம்பாதித்துவிட்டால், அவன் நீதிஸ்தலங்களுக்குத் தப்பி, எந்த உயர்ந்த அதிகாரி வீட்டிற்கும் அழைக்கப்படுவான். அங்குள்ள உயர்ந்த உத்தியோகத்தர்களும் அவனை விருந்திற் கழைத்து உபசரிப்பார்கள் அவனுக்கு நாகரிகமாய் ஓர் விருந்தில் உண்ணத் தெரியாது அவன் உண்ணும் போது எல்லோர்க்கும் வேடிக்கையாக விருக்கும்.

சிறு கதைப் பகுதி.

## அன்பு, நட்பு, காதல்
அல்லது
## ரோசா பீகம்

அ| ஈஸ்வரி
எழுதுவது.

(19-2-34-ன் தொடர்ச்சி.)

தன்னந்தனியே நிலவில் யாரோ பெண் ஒருத்தியை நினைத்து சிந்தை நொந்து வருந்துபவன் நமது வாலிப சந்நியாசியே என்பதும், அவன் காதலிக்கும் பெண் முஸ்லிம் பெண்மணியாகிய ரோசா பீகம் என்பதும் நமது வாசகர்களுக்குச் சொல்லாமலே விளங்கும்.

தன்னந்தனியே ஒள்ளிய நிலவில் வாலிப சந்நியாசி தன் மனதைக்கவர்ந்த கன்னிகையை நினைந்து கலங்கும் சமயத்தில் காஸ்மீர் எங்கணும் முன்னொருபோதும் ஏற்படாத ஓர் கிளர்ச்சி ஆரம்பித்தது. இந்தக்கதையின் ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்டபடி ஹிந்துக்களுக்கும், மஹாராஜாவுக்கும் மாருக, உண்ட வீட்டிற்கு இரண்டகஞ் செய்பவரான முஸ்லிம்கள் யுத்த சந்நத்தராக எழுந்தனர். ஹிந்துக்களையெல்லாம் கண்ட கண்ட இடங்களிற் கொலை செய்ய ஆரம்பித்தனர்; அவர்களின் இல்லங்களை நெருப்புக்கிரையாக்கினர்.

இப்படி இருக்கையில், 300 முஸ்லிம் குடிலசகளுக் கிடையில் தன்னந்தனியே வசிக்கும் கமலநாதன் என்னும் ஹிந்துத் தனிகன் நிலைமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? அவன் அறவிடும் அபரிமிதமான அனியாய வட்டியின் பொருட்டு முன்னரே ஆத்திரங் கொண்டிருந்த முஸ்லிம்கள் யாவரும் அவன் வீட்டை அணுகினர்

ஃ ஃ ஃ

ரோசா பீகத்தின் காதிற் கலகச் செய்தி எட்டியது; கலகக்காரரின் தலைவனாய்த் தன் தந்தை சென்றிருக்கிறான் என்பதை அவள் அறியாள்; இந்தக் கலகத்தில் தனது ஆருயிர்ச் சிநேகிதையான ஊர்மிளாவும் அவள் கணவன் பாடும் திண்டாட்டமாய்முடியும், என்செய்வேன் ஜெகதீசாவென்று ஏங்கிக் கொண்டிருக்கையில் "கமலநாதன்வீட்டிற்கு நெருப்புவை! நெருப்புவை! அங்கு உளளவர்களை அக்கினியில் வேக வை"! என்று வீதிவழியே கலகக்காரர் பெருஞ் சத்தமிட்டுக் கொண்டு ஓடுவது அவள் காதில் நாராசம் என வீழ்ந்தது.

ஃ ஃ ஃ

"இந்த முஸ்லிம்களோ முரடர்; ஆண் பெண் என்றபேதமின்றி யாவரையும் ஈனஇரக்கமின்றி வதைப்பார்கள். பெண்களாயுள்ளவர் — அதிலும் சௌந்தரியமுள்ளவர்கள் — இப்பாவியர் கையிற் சிக்குப்பட்டால், மானமிழந்து மரியாதை யிழந்தே ஈற்றில் வதைக்கப்படுவார்கள்! ஐயோ! என் ஆருயிர் ஊர்மிளாவின் கதி என்னாகும், இனிக் கால தாமதம் செய்ய வொண்ணாது! நானே என் சிநேகிதையின் மானத்தைக் காப்பாற்றுவேன்" என்று ரோசா பீகம் மனதில் தீர்மானித்தாள்.

ஃ ஃ ஃ

கள்ளிரவு; ஓராரணங்கு தன்னந்தனியே ஒள்ளிய நிலவில் வடக்குத் திசையை நோக்கிச் செல்கின்றாள். தன்னையாரும் கண்டு விடுவார்களோ என்ற பயத்தினால் போலும், அவள் மரநிழல்களுக்கிடையே பதுங்கிப்பதுங்கி அடிக்குமேலடிவைத்து மெல்லப்போகின்றாள். அவள் இடுப்பில் ஓர் ஈட்டியும் உடைவாளும் தொங்கிக் கொண்டிருந்தன. அதே நேரத்தில் ஓர் ஆள் தனக்கு எதிராக விரைவாக வருவதைக்கண்டு தன் உடைவாளை உருவிக் கையில் வைத்துக்கொண்டே அவளும் யாதும் அச்சமின்றி நடந்தனள் இருவரும் ஒருவரையொருவர் நெருங்கினர்; எதிருக்கெதிராக நின்றனர்! என்ன ஆச்சரியம்! வாலிப சந்நியாசியும் ரோசா பீகமும் அந்த நேரத்தில் அந்த ஒள்ளிய நிலவில் இருவரும் ஒருவரையொருவர் சந்திப்பரென்று யார்தான் காத்திருக்கக் கூடும்!

தன் மனத்தைக் கொள்ளை கொண்ட நாரிமணியைக் கண்ட வாலிபன் அப்படியே ஸ்தம்பித்துப் போனான்; ரோசா பீகமும் செய்வதின்னதென்றறியாது நின்றாள்.

ஃ ஃ ஃ

"பெண்ணே! இந்த கள்ளிரவில் இங்ஙனம் தனியே எவரது துணையுமின்றி பெண்பாலாகிய நீ வெளிவருதல் ஏற்குமா?" என்று ஒருவாறு வாய்திறந்து வாலிபன் கேட்டான். ரோசா பீகம் தலையைக் கவிழ்த்து கொண்டே, "கன்னியருக்குக் கற்பு என்னும் களங்கமற்ற ஆயுதம் இருக்கையில் துணைவேறேதும் வேண்டுமா?" என்று, சந்நியாசியின் வேண்டுகோளின் பின், தான் வெளியே தன்னந்தனியே புறப்பட்ட காரணத்தைக் கூறினாள்.

ஃ ஃ ஃ

"இப்படியான ஓர் கலகம் நேரிடவரும் என்பதை அறிந்து கமலநாதனுக்கு முன்னரே எச்சரிக்கை செய்தேன்; அவன் தன்னுடைய சாசனங்களையும் உறுதிகளையும் பணத்தையும் எங்கே பாதுகாப்பாய் வைத்து விட்டு, உயிர் போகினும் தான் வசிக்கும் வீட்டை விட்டு அகல்வதில்லையென்று பிடிவாதம் சாதிக்கிறான்". என்று வாலிப சந்நியாசி சொன்னான். "ஐயோ, அப்படியானால் அவரின் மனைவியின் கதி என்ன" என்று இரங்கினள் ரோசா பீகம்.

"சக்தி நேரினும் தன் கணவனை விட்டுப் பிரிவதில்லையென்று அவ்வுத்தமி தீர்மானித்திருக்கிறாள்."

"கண்களிருந்தும் இல்லாதார்போலக் கமலநாதன் செய்யும் செயல்களென்ன? கமலநாதனிடம் இருந்து உறுதிகளையும் சாதனங்களையும் கைப்பற்றக் கலகக்காரர் முயற்சிப்பார்கள்! அதில் தவறினால், ஊர்மிளாவை மானபங்கப் படுத்துவார்களே! இதை அறியாரா கமலநாதன்?"

"ஆனால் கமலநாதன் தன் மனைவியிலும் பார்க்கத் தனது செல்வத்தையே மேலாக மதிக்கின்றான்".

"ஆனால், ஐயா இந்த ஆபத்தைத்தீர்க்க வழியில்லையா? என் சிநேகிதையின் மானத்தைக் காப்பாற்ற வேறு ஏதும் மார்க்கமில்லையா" என்று ரோசாபீகம் தேம்பித் தேம்பி அழுதாள். வாலிப சந்நியாசியால் வாய் திறக்க முடியாது பிரமித்து நின்றான் சிறிது நேரஞ் செல்ல, பெண்மணியே, நிமிர்ந்து சந்நியாசியை நோக்கி, "ஆம், இதுவே மார்க்கம். சக்திவரினும் வருக" என்று புகன்று சரேலென சந்நியாசியைக் கடந்து அப்பாற் சென்றாள்.

மங்கையின் தீர்மானத்தையும், சௌந்தர்யத்தையும் நோக்கிய சந்நியாசி திடுக்கிட்டு, ஒன்றும் பேசாது அன்னவளை வேகத்துடன் பின்றொடர்ந்தான்.

(வரும்.)


## திருவருட் பயன்

[சைவபோதம்
மூன்றும் புத்தகமாகவுள்ளது]

ஸ்ரீ. சு. சிவபாதசுந்தர மவர்கள்
செய்த பதவுரை, விரிவுரை
முதலியவற்றோடு.

4-ம் பதிப்பு
வெளிவந்துவிட்டது.

விலை சதம் 40.] [அஞ் 7

வண்ணார்பண்ணை, 26-2-34.
மனேஜர், 'இந்துசாதனம்.'

## மலேரியா
## மஹாதைலம்.

உங்களுக்கு மலேரியா என வழங்கும் மலேச்சுரம் தணியவேண்டில் இத் தைலத்தை உபயோகியுங்கள். இன்னும் தொய்வு ரோகத்துக்கு இது கைகண்ட தைலம் நூற்றுக்கணக்கானோர் நற்சாட்சிப்பத்திர மளித்துள்ளார். கணைக்கு இன்றியமையாதது. இருமல், தொய்வு, ஈளை, பீநசம், தேக எரிவு, 'ஹிஸ்டீரியா' வாய்வு இப்படியான ரோகங்களை மாற்றுவதில் வலிமை உள்ளது.

இங்ஙனம்,
போ. செல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

Y. 204. 12-2—11-2-35)

## அரசாங்க சபைத் தெரிவு!

விளம்பரங்கள்
துண்டுப் பத்திரங்கள் முதலியன
சுவர் விளம்பரங்கள்

அழகாகவும்
துப்பரவாகவும்
பல வர்ண மைகளிலும்

சைவப் பிரகாச யந்திரசாலையில்
அச்சடித்துக் கொடுக்கப்படும்.

சிறந்த வேலை! உத்தரவாதம்!

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.

# முற்பணமே கட்டவேண்டும்.

மானேஜர்.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாந்நாவாரி, கீர்முன்னி விதை, நாகப்பூ. வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, நருவ,குஷ்டத்தன் உண்டாயிக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௬0 கால்ருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடு வாசிகளுக்குச் சிலப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு
(Y 179. 1-1-34 to 31-12-34.) சிலோன்.

இன்னும் ஒருவாரத்திற்கிடையில்
இங்கு வரவிருக்கும் "கொக்ரா" என்னும் கப்பலில்

# 100000 குடைமார்க்கு ஓடுகள்

வருகின்றன.

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால்,
மலிந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது
தண்ணீரை உறுஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை.
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34

ஒன்றைப் பார்த்துச் செய்யப்பட்டதிலும்.
முதலாகச் செய்யப்பட்டபொருளே எவ்வாற்றானும் சிறந்தது.

# லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
# தைலம்

1885-ம் ஆண்டு முதன்முதலாகச் செய்யப்பட்டது.
1933-ம் ஆண்டிலும் இதுவே முதன்மை பெற்றுள்ளது.

## இந்தியாவில் இந்தியர்களாலே செய்யப்பட்டது

இத்தைலத்தையே எல்லாவிதமான
நோவுகளுக்கும் வலிப்புகளுக்கும் உபயோகியுங்கள்.

Y 18. 11-2-33—31-3-34.)

## அரசாங்க சபையும் அதன் தலைவரும்.

—(*)—

நீதிஸ்தலத்தில் நியாயவாதியுடன் வாது

நீதிஸ்தலம் அரசாங்க சபையாய் இருந்தாலோ!

அசரப்பா விவாகரத்து வழக்கு நாளைத்தினம் வரைக்கும் தவணையிடப்பட்டிருக்கிறது. சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்த கடைசி விசாரணையில் 2ம் எதிரியான மிஸ்டர் ஏ. எவ். மொலெமூரேக்கும், வாதியின் நியாயவாதியான மிஸ்டர் ஆர். எல். பெரீரா அவர்களுக்கு மிடையில் ஒரு சந்தர்ப்பத்தில் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு சாட்சியை நோக்கி மிஸ்டர் மொலமொரே கேட்ட கேள்விக்கு மிஸ்டர் பெரீரா ஆட்சேபிக்க, மிஸ்டர் மொலெமூரே, "இங்கே எனது நியாயவாதி இல்லாமையால், நானே வாதிக்க வேண்டியிருக்கிறது. நான் ஏதுஞ் சொல்ல உரிமையில்லையா? ஏதும் பிழையாகச் சொன்னால் அதனைப்பற்றிச் சொல்ல நீதிபதி இருக்கிறார். எனவே, எனது கண்ணியர் எனக்கெனத் தடை செய்யாதிருப்பாராக" என்றார்.

மிஸ்டர் பெரீரா. நீதிஸ்தலத்தை அரசாங்க சபை என்று எண்ணுகிறீரா?

மிஸ்டர் மொலமூரே. இது அப்படி இருந்தாலோ என்று எண்ணுகிறேன்.

மிஸ்டர் பெரீரா. நீர் தானே அந்த இடத்திலிருந்தும் சீக்கிரத்தில் தூரத்தப்படப் போகின்றீரே!

மிஸ்டர் மொலமூரே. அப்படித்தான் நீரும்!

இந்த வாக்குவாதத்தின் பின்னரே விசாரணை நடைபெற்றது.

### எப்படி இறந்தாள்.

மன்னார் சென்ற் செபஸ்தியான் தேவாலயத்துக்குச் சமீபமாகவுள்ள ஓர் குளத்தில் சென்றசெவ்வாய்க்கிழமை ஒரு பெண்ணின் பிரேதம் மிதக்கக் காணப்பட்டது. அவள் இறக்குமுன் அங்குள்ள ஓர் வீட்டில் வேலைக்கிருந்து சிலநாட்களாகக் காணப்படவில்லை. பொலிசார் புலன் விசாரித்துவருகின்றனர்.

### 3 லட்சம் கலன் சாராயம்.

இலங்கையில் உள்ள தவறணைகளுக்குக் கொடுப்பதற்கு 3 லட்சம் கலன் சாராயம் அரசினரால் அடுத்த ஆண்டிற்குத் தேவைப்பட்டிருக்கிறதாம். இதுகாலும் சாராய உற்பத்திச்சாலைகள் இலங்கையில் 6 மாத்திரமே இருந்தன. இனி 7 இருக்கும். 4 ஆண்டுகளுக்குமுன் இலங்கையில் 6 லட்சம கலன சாராயம் உபயோகிக்கப்பட்டதாம்.

### புகைரதத்தில் நெரியுண்டிறந்தான்.

ஒரு கடவத்தைப் புகைரத ஸ்தானத்துக்குச் சமீபமாகவுள் புகைரதப்பாதையில் சென்ற சனிக்கிழமை பின்னேரம் எலாரிஸ் சில்வா என்னும் சிங்களவாலிபன் ஒருவன் எதிரே வந்த புகைரதத்தினால் தட்டுப்பட்டு உடன் மரணமெய்தினன் என இதுவரை செய்தி ஒன்று கூறுகிறது.

---

### புகைரதப்பகுதி விளம்பரம்.

யாழ்ப்பாணப் பிரிவுக்குள் கிரயங்குறைந்த போய்வருதற்கான பிரயாணச் சீட்டுக்கள்.

இந்த மார்ச்மீ 1ம் தொடக்கம், இலங்கை அரசினர் புகைரதப்பகுதியார் யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள எந்தப் புகைரத ஸ்தானங்களிலும் தங்குமிடங்களிலுமிருந்து, கீழே குறிக்கப்பட்ட புகைரத ஸ்தானங்களுக்கும் தங்குமிடங்களுக்கும் அவற்றிற்கு நேரே குறிக்கப்பட்டுள்ள கிழமைகளில் மாத்திரம் அன்றன்றே போய்வருவதற்கான 1ம் 2ம் 3-ம் வகுப்புப் பிரயாணச் சீட்டுக்களை 1½ விகிதமாக உதவுதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்.

விபரம்.

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் | போய்வர | திங்கள் | நேரமும் |
| மிருசுவில் | ,, | செவ்வாய் | ,, |
| கொடிகாமம் | ,, | புதன் | ,, |
| ஆனையிறவு | ,, | வியாழன் | ,, |
| பளை | ,, | வெள்ளி | ,, |
| சாவகச்சேரி | ,, | சனி | ,, |
| யாழ்ப்பாணம் | ,, | ஞாயிறு | ,, |

E. W. ஹெட்,
ஸ புகைரதப்பகுதி அதிபர்.

புகைரதத்தலைமை ஆபீஸ்
கொழும்பு,
27-2-34.
(G. 13, 5-3-34.)

## பத்திரிகைகளின் கருத்து.

—:*:—

### ஓர் எச்சரிக்கை

சேர் ஹென்றி பேஜ்குரொப்ற் என்பவர் இலங்கை அரசியல் சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் எடுத்தாண்ட தீர்மானத்தைப் பற்றிப் பேசியவற்றில் அநேக உண்மைகளும் பொதிந்திருக்கின்றனவென்று கொழும்பிற் பிரசுரமாகும் ரைம்ஸ் பத்திரிகை கூறுகிறது. இலங்கையில் "அநுதாபம்" கொண்டு பேஜ்குரொப்ற் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை. இந்திய அரசியற்றிருத்தத்தைத் தாக்குதற்காகவே இந்தத் தீர்மானத்தை எடுத்தாண்டார் என்பதும் சில விஷயங்களைப் பேஜ்குரொப்ற் மிகைபடக்கூறியமையினால் அத்தீர்மானம் தோல்வியடைந்ததென்பதும் இப்பத்திரிகையின் கருத்தாகும். டொனமூர் அரசியலை இன்னுங் கொஞ்சக் காலத்திற்குப் பரீட்சித்துப் பார்க்கவேண்டும். அதன்பின்னரே ஏதும் மாற்றஞ் செய்யவேண்டும் என்று ரைம்ஸ் கூறி பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்திலிருந்து இலங்கை எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் எனவும் வற்புறுத்துகிறது. இலங்கை அரசியல் வாதிகளின் பிழைகளை அவதானித்துக் கண்டித்து அவர்களுக்களித்த 'சன்மை'களைக் களையப் பலர் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள் ஆதலினால் இலங்கை அரசியல் வாதிகள் அரசியற்றிருத்தம் வேண்டும் என்று பிதற்றுவதை விடுத்து பிரிட்டிஷாரின் நன்மதிப்பைப் பெறுதற்கு முயற்சிப்பாராக என்று இந்த வெள்ளைக்காரப் பத்திரிகை கூறி முடிக்கிறது.

### இலங்கையின் செல்வ நிலை.

உலகமெங்கணும் இதுகாறும் இருந்த வியாபாரமந்தம் நீங்குகின்றதென்பது "டேயிலிநியூஸ்" பத்திரிகையின் சித்தாந்தமாகும். இற்றைக்கு 6, 7 ஆண்டுகளுக்கு முன் இருந்த செல்வநிலைமையை உலகம் இப்போது அடைவது கஷ்டமெனினும், வியாபார நெருக்கடியினின்றும் ஒருவாறு தப்பி முன்னேறி இருக்கிறதென்பது இப்பத்திரிகையின் கூற்று. செழிப்பு வருங் காலத்தில் தற்போதைய சீர்திருத்தத்தின்படி, உலகத்தின் ஒரு பாகம் மாத்திரம் நன்மையடையாது. எப்பகுதிகளும் அச்செல்வத்தாற் பாதிக்கும். எனவே, நமது இலங்கையும் பொருளாதார நிலைமையில் முன்னேற்றமடையும் என்று டெ. தின வர்த்தமானி கூறி இன்னுங் கூறுவதாவது "காலம் ஓர் மாறுதல் அடைகின்றது வரப்போகும் மாறுதல்களில் இலங்கையின் பொருளாதார நிலைமை நன்மையடையும் என்று திடமாகச் சொல்லலாம். இலங்கையின் பிரதான கைத்தொழில்கள் இன்னும் அபிவிருத்தி அடையவில்லை யெனினும் தேங்காய்த்தொழிலும், தேயிலைத்தொழிலும் இற்றைக்கு இரு ஆண்டுகளின் முன் இருந்த நிலைமையிலும்பார்க்க எவ்வளவோ முன்னேறி இருக்கின்றன".

### சுன்னாகம் சுடலையில் தற்கொலை.

சென்ற 1-ம் தேதிகாலை சுன்னாகம் மயானத்தில் உள்ள ஆலமரக்கிளையொன்றில் சுன்னாகம்தெற்கில்வசித்த சாகமுத்து காலிங்கம் என்பவர் தூக்கிட்டு இறந்து கிடக்கக் காணப்பட்டார். அவருடைய இடுப்பில் ஓர் கடிதம் காணப்பட்டது. அதில் தான நோய் காரணமாக இறந்துவிடத் துணிந்ததாகவும், தனது பிரேதத்தை ஒருவிதமாயும் பங்கப்படுத்த வேண்டாமென்றும், தனது சகோதரியே தன்னைப் பாதுகாத்து வந்தாரென்றும், சகோதரனால் தனக்கு வரும்படியான 350 ரூபாவை அவர் (சகோதரன்) கொடுக்காதுவிட்டதுடன் தன் கோலைப்பற்றியும் சிந்திக்கவில்லையென்றும் எழுதப்பட்டிருந்தது.

### பரதவர்க்கிடையே கலகம்.

ஒருவர் இறந்தார்.

சென்றவாரம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில், காவாக்துறையைச் சேர்ந்த டாஞ்சி மரியாம்பிள்ளை என்னும் பரதவர், மண்டாத்தடியால் ஏற்பட்ட காயங்களினால் இறந்தார்.

சிலநாட்களுக்குமுன், காவாக்துறைப் பரதவருக்கும் சுதுமலைப் பரதவர்க்குமிடையே கடற்கரையிற் கலகம் ஏற்பட்டதென்றும், இருகட்சியாரும் கைகலந்து சண்டை செய்கையில் சுதுமலையிலுள்ள சின்னப்பு என்னும் பரதவர் மரியாம்பிள்ளையை மண்டாத்தடியாற் குத்தினார் என்றும் தெரிகிறது.

## பின்னிற்க வேண்டாம்!

—*—

நமது தாய் நாட்டுச் சேதார பூகம்ப அனர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டப்படுவதைப் பற்றி நாடோறும் பத்திரிகைகளிற் படித்தும், அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டாமா! இறந்த பல்லாயிரக்கணக்கானவர் போக, எஞ்சி யுள்ளோருக்கு ஊண், உடை, இல்லம் என்பனவற்றை அளித்தலில் உதாரத்துவத்திற் சிறந்த தமிழ் மக்களாகிய நாமும் பங்குபற்ற வேண்டாமா? ஆடவர்களே! பெண் மணிகளே, பாலியரே! உங்களுங்களால் இயன்ற தருமத்தை இந்த இந்துசாதனாலயத்திற்கு அனுப்பி வையுங்கள். எச்சிறு தொகையேனும் உவந்தேற்றுக் கொள்ளப்படும். போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

மானேஜர்.

யாழ்ப்பாணம் கச்சேரி சிறுப்பர்பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்டது.

| | ரூ. ச. |
|---|---|
| முன்னர் உபகரிக்கப்பட்டது | 864 78 |

ஸ்ரீ மான்கள் S. S. முருகேசு 50 சதம், K. சின்னப்பு 50 சதம், ஓர் நண்பர் 50 சதம், J. அலோசியஸ் 25 சதம், V. தம்பு 50 சதம், A. சுப்பிரமணியம் 50 சதம், P. அந்தோனி 50 சதம், S. அந்தோனிமுத்து 50 சதம், A ஜோன் 50 சதம், P. ஆறுமுகம் 50 சதம், N. சேனாதிராசா 50 சதம், S. தர்மலிங்கம் 50 சதம், M. கதிரவேலு 50 சதம், கா. கந்தையா 50 சதம், அமுது 50 சதம், முத்துவேலு 50 சதம், சிங்கம் 50 சதம், S சரவணமுத்து 50 சதம், S. விசாகப்பெருமாள் 25 சதம், V. சந்திரசேகரம் 25 சதம், (பெயர் தெரியவில்லை.) 25 சதம், M. S. அப்துல்காதர் 25 சதம், க. வேலுப்பிள்ளை 25 சதம், செ. காராளர் 25 சதம், A. ஆறுமுகம் 50 சதம், E துரையப்பா 50 சதம், M. முத்துச்சாமி 50 சதம், S. தம்பிஐயா 50 சதம், ப. கதிரவேலு 50 சதம், A. குமாரசாமி 50 சதம் N. சின்னப்பு 50 சதம், K. சின்னையா 50 சதம், K ஞானப்பிரகாசம் 50 சதம், M. சுப்பிரமணியம் 50 சதம், A. அம்பலவாணர் 50 சதம், R. வைத்தியலிங்கம் 25 சதம், T. சவரத்தினம் 25 சதம், K. S. ஞானசம்பந்தர் 25 சதம், V. கந்தையா 50 சதம், R. R. குசப்பிள்ளை 50 சதம், S. நடராஜா 50 சதம், A. கைலாயபிள்ளை 50 சதம், இ. ஐயாத்துரை 50 சதம், T. சின்னையா 25 சதம், K. வேலாயுதர் 25 சதம், S. பொன்னையா 25 சதம், M. சிவசிதம்பரப்பிள்ளை 25 சதம், N. வீரவாகு 50 சதம், S. செல்லையா 50 சதம், ஐ. சின்னப்பு 50 சதம், S. அருளம்பலம் 25 சதம், A. K. அம்பலவாணர் 50 சதம், கன்மைவிரும்பி 25 சதம். ஆக 22 50

| | |
|---|---|
| ஸ்ரீ V. கணபதிப்பிள்ளை செயின் கிளெயிர் தோட்டம், தலவாக்கொல்லை | 4 00 |
| ஸ்ரீ K. மாணிக்கவாசகர் (மாதகல்) | 2 00 |
| M. S. சுப்பிரமணியம் (பிறக்டர் மல்லாகம்) | 2 00 |
| K. சின்னத்துரை (வல்வெட்டித்துறை) | 1 00 |
| ஆக ரூ. | 896-28 |

---

## NOTICE OF SALE OF LAND

காணி விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 4565 ம் இலக்க வழக்கில் 1934ம் ஞு தைமீ 8ந் திகதியைக் கொண்ட கோட்டுச்சட்டவாப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்குங் காணி 1934ம் ஞு பங்குனிமீ 31ந சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோவிற்பற்று மூளாய் இறை புளிவளைச்சான் பரப்பு செல் இலாச்சம் 20. எல்லைகிழக்கு சின்னப்பு அப்புத்துரையும், பங்காளிகளும்; வடக்கு கந்தப்பர் சுப்பையா கைம்பெண் வள்ளியம்மை; மேற்கு கந்தப்பர் சுப்பையா கைம்பெண் வள்ளியம்மையும், குமாரப்பெருமாள் நாகலிங்கமும்; தெற்கு வைத்தி விசுபரும், விசுவேத்தம்பி முருகேசுவும் இடைகதும்.

வி செல்வத்துரை,
கொம்மிஷனர்.
14-1-34.

1 தொல்புரம் சிற்றம்பலம் ஏரம்பு — வழக்காளி,
Vs.
1. மூளாய் சிற்றம்பலம் கார்த்திகேசுவும் பெண்
2 நாகமுத்துவும். — எதிராளிகள்,

(Mis. 223. 5-3-34)

## மதிப்புரை.

—:o:—

ஆனந்தபோதினி வாரப்பத்திரிகை.

சென்ற 5 ஆண்டுகளாக டெமி ½ பக்க அளவில் 16 பக்கங்களுடன் வெளிவந்த இவ்வாரப்பத்திரிகை 25-2-34 ஞாயிறு முதல் 6-ம் ஆண்டு தொடக்கம் டெமி ¼ அளவுகொண்டு 32பக்கங்களுடன் புத்தகரூபமாக வெளிவந்திருக்கிறது. சித்திரப் படங்களுடன் கூடிய சிறுகதைகளும், விநோத சித்திரப் படங்களும், இன்னும் பல அரிய விஷயங்களும் அடங்கிக் காலத்திற்கேற்ப வெளிவருதல் இப்பத்திரிகையின் முன்னேற்றத்தைக் காட்டாநிற்கின்றது. இதன் வருட சந்தா 3 ரூபா மாத்திரமே! விரும்புவோர் "மானேஜர் ஆனந்தபோதினி, லாயர் சின்னத்தம்பி முதலித்தெரு, சௌக்கார்ப் பேட்டை, சென்னை" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

[எமக்கனுப்பிய பிரதியை உவந்தேற்றும்.]

### செந்நிற மழை.

செக்குத்தராபாத் என்னுமிடத்தைச் சேர்ந்த சிடிப்பேட்டையில் சென்ற வாரத்தில் செந்நிறமானமழை பெய்ததென்று ஓர்செய்தி சொல்கிறது.

### 150 பூமியதிர்ச்சிகள்.

ஜனவரிமாதம் 15-ம் தேதி நடந்த பெரும் பூகம்பத்தின்பின், ஒவ்வொரு நாளும் பீகாரில் பூமியதிர்ச்சிகள் ஏற்படுகின்றன வென்றும், இற்றைவரை ஏறக்குறைய 150 தரம் பூமிநடுங்கினது என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

### C. R. தாஸ் அவர்கள் உருவச்சிலை

தேசியசிங்கமாக விளங்கிய இவரின் ஞாபகத்தை நிலைக்கச் செய்தற்காக கல்கத்தா வாசிகள் இவரின் உருவச்சிலையொன்றைக் கல்கத்தாவில் நாட்டப்போகின்றனர். அதற்கு வேண்டிய பொருள் சேகரிக்கப்படுகின்றது. அந்நிதிக்கு காங்கிரஸ் வாதியாகும் டக்டர் B. C. ராய் அவர்களே தலைவராம்.

### சங்கீதவித்துவான் கௌரவிக்கப்பட்டார்.

சென்றவாரம் மைலாப்பூர் ஆனந்த மண்டபத்தில் தமிழன்பர் மகாநாட்டினரின் ஆதரவின்கீழ், ஹரிகேசவ நல்லூர் காயகசிகாமணி ஸ்ரீமான் முத்தையாபாகவதர் அவர்களுக்கு ஓர் தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டது. மகாமகோபாத்தியாய டக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களே அவைத்தலைமை வகித்தார்.

### 12 வயதுச்சிறுமியின் கொலைவெறி

கியூபெரக்கிலுள்ள மேரி நேவலா என்னும் 12 வயதுச் சிறுமி தன்னுடன் விளையாடிக்கொண்டிருந்த ஜோசப்பைன் வேரொப்பி என்னும் 8 வயதுச் சிறுமியைக் கொலை செய்ததாகத் தெரிகிறது. நடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று ஜோசப்பைன் வேரொப்பியின் பிரேதம் அவளது வீட்டிற் கருகில் வழியில்கிடக்கக் காணப்பட்டது. பொலிசார் இதைக் குறித்து விசாரணை செய்த சமீபத்தில் 12 வயதுச் சிறுமியைச் சிறை செய்தார்கள், அச்சிறுமி பின் வருமாறு தன் குற்றத்தை ஒப்புக் கொண்டாள். "நான்தான் ஜோசப்பைனைக் கொன்றவள். அவள் என்மீதும் என்தாயார்மீதும் சில பொய்யான விஷயங்களைச் சொன்னாள். நான் அவளைப் பலமுறை எச்சரிக்கை செய்தேன். அவள் கேட்கவில்லை. நடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று நான் அவளது தலையிற் கல்லினால் அடித்தேன். கழுத்தை ஓர் கயிற்றில் இறுகச் சுற்றி அதைக் கால்களுடன் கட்டி வீதியில் அவளை உருட்டிவிட்டேன்."

---

## பெருகுகிரி யந்திரங்கள்.

செழுகு திரிகள் செய்யும் நல்ல ஜப்பானிய யந்திரங்கள் மூன்று இருக்கின்றன: ஒன்று 138 பெரிய செழுகுதிரிகளை ஒரே நேரத்தில் செய்யும். இரண்டு தனித்தனி 198 சிறிய செழுகுதிரிகளைச் செய்யும். மூன்றினதும் விலை 1000 ரூபா; தனித்தனியாகவும் விற்கப்படும். நாளைக் குறித்து பார்வையிடலாம்.

PRODUCE,
TRANSPORT COMPANY.
பேராதனை.

(Mis. 222. 5 3to12-3-34)

இ றை ம்! இ றை ம்!!

## மகாராஜ தத்துவ சாலாமிஸ்ரி லேகியம்.

ஒரே வேளையில் ஆண்சிங்க மாவீர்கள்.

தங்கம் வெள்ளி முத்து பவளம் அயம் காந்தம் அம்பர் கஸ்தூரி சாலாமிஸ்ரியும் இன்னும் அநேக மூலிகையும் சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யபெற்றது.

இதன் முக்கிய குணம்:—

காங்கை இடுப்புவலி கைகால் அசதி சூடு முதலிய மற்ற ரோகங்களனைத்தையும் சங்காரஞ் செய்யக்கூடியது இப்பூவுலகில் இந்த லேகியமொன்றே. முழுவிபரக்கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்; அவர் அவர் வியாதிக்குத் தக்கபடி ஒரு மண்டலம் அரை மண்டலம் சாப்பிடவேண்டும்.

1 மண்டலம் சாப்பிடின் ரூ. 10 0 0 ½ மண்டலம் ரூ. 5 0 0. ¼ மண்டலம் ரூ. 2 12 0

ஹக்கீம் V. A. றஜாக் கம்பெனி,
பறங்கிப் பேட்டை, (S I.).

(Y 147. 20-11-33to19-11-34.)

காலத்துக்குத்தக்க மலிவுவிலே!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

### மிலிற்றறி, கவர்ன்மெண்ட், முனிசிப்பல் கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக்கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமேடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:–64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை.-316–ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்றாய் கன்னுகம இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.


Y. 2. 31-3-34.)

வந்துவிட்டன! வந்துவிட்டன!!

குறைந்தவிலே! குறைந்தவிலே!

## பெயர்பெற்ற பவுண்மார்க் ஓடுகள்.

திறமான "பவுண்மார்க்" ஓடுகள் தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வந்திருப்பதால் இன்று தொடக்கம் (1-3-34) ஏறக்குறைய ஒருவாரம் வரையில் மேற்படி ரேகில் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.



தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
யாழ்ப்பாணம்.
1-3-34.

Phone No. 93.

(Y. 3. 26-4-34).

## N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No 30.

(Y. 201. 8.2—7.2 35) ஐ

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரா மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாஙகலாம.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறைடாமல் இருக்குமானல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்புமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்முலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y.143 21-11-33.—20-11-34)(ஜ)

## இயாத நாத மணிகள்.



தேவாலயங்களிலும், வித்தியாலயங்களிலும் உபயோகப்படத்தக்க, காதுக்கினிய ஓசையோடுகூடிய "இயாத நாத மணிகள்" சிறுமணி தொடக்கம் மிகப் பெரிய மணி வரையில் எங்களிடத்தில் எந்தநேரமும் பெறத்தக்கன. இன்னும் விருப்பியவர்கள் தங்களுக்கு வேண்டிய மணியின் பிரமாணத்தையும் நிறையையுந்தெரிவித்தால், ஒருகுறித்த தவணைக்குள் தவறுமற் செய்துகொடுக்க ஆயத்தமாயிருக்கின்றோம். எங்கள் தொழிற்சாலையில் ஆக்கப்பட்ட மணிகளையாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன.

S. A தம்பிப்பிள்ளை & சன்ஸ்,
நல்லூர்.

(Y 74. 26-2—25 8-34.) தி-

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpounai, Jaffna on Monday 5th March 1934.